**12.02.2020**

# பத்திரிக்கை செய்தி

## வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (12.02.2020) கலை நிகழ்ச்சி நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று (12.02.2020) மாலை 5.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் 'ஆன்மஜோதி' அமைப்பின் சமரன் கிராமிய கலைகுழுவினரின் சிலம்பாட்டம் மற்றும் கிருஷ்ணாஞ்சலி அகாடமியின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

இதனைத் தொடர்ந்து, வருகின்ற 15.02.2020 சனிக்கிழமை அன்று 'ஆன் தி ஸ்ட்ரிட் ஆப் சென்னை' கலைக்குழுவினர் விமான நிலையம் மெட்ரோ முதல் சென்ட்ரல் மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர்.